Law & Society Trust

# ESCR Newsletter

ISSUE 9, MAY, 2014

## வறியவர்கள் அபிவிருத்தியில் “குறைந்த” பங்குதாரர்களா?

அண்மைக் காலத்தில், நகரத்தின் அபிவிருத்தியும் மற்றும் அழகுபடுத்தலும், குறைந்த வருமானம் கொண்ட குடியிருப்பாளர்கள் மற்றும் சிறிய அளவிலான வியாபாரங்களையும் நகரத்திலிருந்து தொடர்ச்சியாக வெளியே தள்ளுவதையே ஏற்படுத்தியது. இப்பொழுது நடந்தேறி வருகின்ற “வனாத்தமுல்ல” வெளியேற்றமும் அவற்றுள் ஒன்றாகும். வெளியேற்றுதலுக்கான வெளிப்படையான (உண்மையானதும் மற்றும் கருதப்படுகின்றதும்) காரணம், இந்தப் பிரச்சினைக்குரிய நிலங்கள் ‘பெறுமதி வாய்ந்தவை’ (சந்தை விலைப் பெறுமதியைப் பொறுத்த வரை) என்பதோடு வர்த்தகம் மற்றும் ‘நடுத்தர வருமானம்’ கொண்டவர்களுக்கான வீட்டு வசதிகளின் (தனியார் துறையின் ஈடுபாட்டுடன்) அபிவிருத்தி என்பவற்றுக்காக ‘விடுவிக்கப்பட வேண்டிய’ தேவை என்பதை உள்ளடக்கியதாக உள்ளது. வெளியேற்றத்தைத் தொடர்ந்து அவர்களுக்கு கிடைத்ததான வசதி குறைந்த குடியிருப்புகளில் வாழ்பவர்களின் வெளிப் படையான கஷ்டங்களைக் கவனத்தில் கொள்கையில், இந்தக் கட்டுரை பின்வரும் கேள்விகளை எழுப்புகின்றது ï நகர அபிவிருத்தியின் நோக்கெல்லை என்ன? எதிர் பார்க்கப்படும் அபிவிருத்தியின் பயனாளிகள் யார்? மேலும், அபிவிருத்தியின் செயன்முறை ஏதேனும் வகையில் இலங்கை அரசியலமைப்பு நியாயாதிக்கத்தின் அடிப்படை உரிமைகளையும் மற்றும் ஸ்தாபிக்கப்பட்ட தேசியக் கொள்கையையும் எதிர்க்கின்றதா?

ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடாக வருவதற்கான இலங்கையின் நிலைமாற்றம், அதிகரித்த ஏற்றுமதிகளால் முன்கொண்டு செல்லப்படும் வளர்ச்சி, வெளிநாட்டு முதலீடு மற்றும் அதன் நகர்ப்புற மையங்களிலான ஒரு இடம்சார்ந்த மாற்றத்தினால் வசதியளிக்கப்பட்டு மற்றும் ஆதரவளிக்கப் படும் உட்கட்டுமான அபிவிருத்தி போன்ற பொருளாதார மாற்றத்தை அவசியப்படுத்துவதாக எதிர்பார்க்கப்பட்டது.[1] குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளின் வெளியேற்றுதலும் மற்றும் மீள்குடியேற்றுதலும் இலங்கையின் நகர்மயப்படுத்தல் செயல்திட்டத்தின் ஒரு அவசியமான அம்சமாக இனங் காணப்பட்டுள்ளது.[2] நகர அபிவிருத்தி அதிகாரசபையின்[3] (ந.அ.அ)



2011 கணிப்பீடுகளின் படி, கொழும்பு நகரில் 1,499 வசதி குறைந்த இடங்களில் (முக்கியமாக குடிசைகள் மற்றும் சேரிப்புறங்களை உள்ளடக்கிய குறைந்த வருமானம் கொண்ட வீட்டு வசதிகள்) சுமார் 69,000 வீடுகள் அமைந்துள்ளன. இந்தக் குடியிருப்புகள் நகரின் மொத்த நிலப்பரப்பின் அண்ணளவாக 11% ஐ உள்ளடக்குவதுடன் நகரின் சனத் தொகையின் அரைவாசியைக் கொண்டுள்ளது. இந்தக் குடியிருப்புகளிலுள்ள நிலைமைகள் தரமில்லாத கழிவறை மற்றும் வடிகால் வசதிகள், இடநெருக்கடி மற்றும் அதிக சனச் செறிவு உட்பட, மோசமான நிலையிலேயே இருந்தன. திட்டமிட்ட நகர வளர்ச்சி, சுற்றாடல் சிநேகபூர்வ அபிவிருத்தி மற்றும் நிலங்களின் பொருத்தமானதும் மற்றும் வினைத்திறனானதுமான உபயோகம் என்பவற்றை உள்ளடக்கிய நகரின் நிலைமாற்றத்துக்கு அவை எதிரானவையாக இருந்தன.

வனாத்தமுல்லயில் குடியிருப்பவர்கள் 1997 இலிருந்து வெளியேற்றுதலுக்கு உட்படுபவர்களாக உள்ளனர், அப்போது குடியிருப்பாளர்களின் எதிர்ப்புக் காரணமாக ஒரு சிறிய பகுதி மட்டுமே துப்பரவாக்கப்பட்டது. தற்போதைய திட்டம், அறிவிக்கப்படுமாற் போல, 72 ஏக்கர்கள் அளவிற்கு பெரிதான நிலப் பரப்பை ‘கையகப்படுத்துவதற்கு’ உள்ளது. வெளியேறுவதற்கான அறிவித்தல் தற்போது குடியிருப்பவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. 2010 இல் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட, ந.அ.அ, வெளியேற்றுதல் செயன்முறையை முன்னின்று நடாத்துகின்றது. வெளியேற்றப்பட வேண்டியவர்களைக் கையாள்வதற்கு இராணுவம் மற்றும் பொலிஸ் என்பவற்றின் வெளிப்படையான உபயோகம், வெளியேற்றுவதில் முன்னொரு போதும் இல்லாத வலுக்கட்டாயம் மற்றும் பலவந்தப்படுத்தலின் ஒரு மட்டத்தை அறிமுகப்படுத்தியது. அவர்களது வீடுகள் போதுமானதை விட அநேகம் குறைவாக இருந்தபோதிலும், குடும்பங்களில் பல தங்களது காணிகளுக்கான சட்ட உரித்தைக் (உறுதிகள்) கொண்டி ருந்தனர், அவை அநேகமான சந்தர்ப்பங்களில் 20 வருடங்களுக்கும் மேற்பட்டவையாக இருந்தன. குடும்பங்கள் சட்ட உரித்தைக் கொண்டிராதவிடத்தும் கூட, வனாத்தமுல்லவிலான அவர்களது

---

[1] எஸ். கெலெகம, (2013) இலங்கையில் நகர்மயமாக்கல் - ஒரு வெளிப்படும் சவால், கொள்கை ஆய்வுகளுக்கான நிலையம், 25ஆவது மாநாடு.

[2] உலக வங்கி, UNHABITAT (2012) இலங்கையின் நகரத் தொலை நோக்கை கொள்கை மற்றும் நடவடிக்கைகளாக மாற்றுதல்.

[3] கொழும்பு அபிவிருத்தியின் முக்கியமான திட்டமிடல் ஸ்தாபனமாக 1978ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை (ந.அ.அ), நகரின் நிலைமாற்றத்தை ஒரு பயனுள்ள பொருளாதார, பேண்தகு அபிவிருத்தி மற்றும் பிராந்தியத்தில் இலங்கையை ஒரு வர்த்தக நிலையமாகவும் மற்றும் பொருளாதார மையம் நோக்கியதாக இட்டுச் செல்வதற்கு ஆணைப்படுத்தப்பட்டுள்ளது. ந.அ.அ, 2010 இல் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி சபையுடன் சேர்த்து பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

குடியிருத்தல், சில சந்தர்ப்பங்களில் 50க்கும் மேற்பட்ட வருடங்களைக் கொண்டதாக இருந்தது. இது, கொழும்பின் குறைந்த வருமானம் கொண்ட குடியிருப்புகள் பெரும்பாலான வற்றுக்கான ஒரு பொதுவான அம்சமாகும். அவர்களது வதிதல் குடியிருப்புகளில் ஒரு நீண்ட காலத்துக்கு இடம்பெற்றிருந்ததுடன் அவர்கள் நகருக்கு அண்மையில் வந்தவர்களல்லர். அறிக்கைகளின் அடிப்படையில், வனாத்தமுல்லக் குடியிருப்பாளர்களுக்கு இழப்பீடு அளிக்கப் படவில்லை, ஆனால் வனாத்தமுல்லவில் அவர்கள் இப்பொழுது குடியிருக்கின்ற வீடுகளை விட ஒரு உயர்ந்த தரமும் பெறுமதியும் கொண்ட நிரந்தர வீடுகளில் அவர்கள் மீள்குடியேற்றப்படுவர். எவ்வாறாயினும், அந்த வீடுகள் நகரின் சுற்றுவட்டத்திற்கு வெளியே அமைந்தவையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அங்கே காணிகளின் சந்தைப் பெறுமதி அவர்கள் தற்போது குடியிருக்கும் இடத்தின் பெறுமதியை விட மிகவும் குறைந்தவையாகும். மேலும், புதிய வீடுகளின் கிரயத்துக்காக ஒரு தொகைப் பணத்தைப் பங்களிப்பதற்கும் குடியிருப்பாளர்கள் எதிர் பார்க்கப்படுவார்கள். முன்னைய வெளியேற்றுதல்களில், குறைந்த வருமானம் கொண்ட குடித்தனங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் அவர்கள் தங்கியிருப்பதற்காக கட்டப்பட்ட தொடர்மாடிக் குடியிருப்புகளுக்கு, பராமரிப்புச் செலவை (அந்த சமயத்தில் 25,000 ரூபாய்) செலுத்துவதற்கு முடியுமாக இருந்தால் மட்டுமே மீள்குடியமர்த்தப்பட்டனர். மீள்குடியமர்த்தப்பட்டவர்களில் பலரும் தொடர்மாடிக் குடித்தன வாழ்க்கை முறைக்கு பழக்கப் படாதவர்களாக இருந்ததுடன் அதனைக் கலாச்சார ரீதியாக பொருத்தமற்றதாகவும் மற்றும் சுமை மிகுந்ததாகவும் கண்டனர்.

நகர்மயப்படுத்தலுக்கான இலங்கையின் தேசியக் கொள்கை மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடியிருப்புகளைக் கையாளுதல் என்பவற்றுக்கிடையில் ஒரு அப்பட்டமான தொடர்பின்மை உள்ளது. எதிர்காலத்திற்கான மகிந்த சிந்தனையின் பார்வை[4] 'நகரின் முக்கிய நிலங்களின் விடுவித்தலும் அபிவிருத்தியும்' ஊடாக வசதி குறைந்த குடியிருப்புகளுக்கான வீட்டுவசதிகளை கோடிட்டுக் காட்டுகிறது. இதன் மூலம், வசதி குறைந்த குடியிருப்பாளர்கள் தற்போது குடியிருக்கும் நிலங்கள் நடுத்தர வருமானம் மற்றும் மேல் வருமானம் கொண்ட வீட்டு வசதிகளுக்காக அபிவிருத்தி செய்யப்படும், அது பதிலுக்கு தற்போதைய குடியிருப்பாளர்களை ஏனைய வீட்டுவசதித் தொகுதிகள் மற்றும் குடியிருப்புகளில் மீள்குடியமர்த்து வதற்கு நிதிவசதியளிக்கும். வசதிகுறைந்த குடியிருப்புகளில் ஒப்பீட்டளவில் சிறிய நிலத் துண்டுகளில் அமைந்துள்ள தனிப்பட்ட வீடுகளை அபிவிருத்தி செய்வதற்கு இயலாத விடத்து, குறைந்த வருமானம் கொண்ட குடியிருப்பாளர்களை மீளக்குடியமரும் இடங்களில் குடியமர்த்துவது அவசியமாகலாம். ஆனால், இறுதி விளைவு அனைவருக்கும் ஒப்புரவானதும் மற்றும் பேண்தகு நிலையுடையதுமா என்பது, 'செயன்முறை' அதே போன்று வெளியேற்றுதல்களின் பெறுபேறுகள் போன்ற ஏனைய விடயங்களில் தங்கியுள்ளது.

சர்ச்சைக்குரிய இந்த செயன்முறை தொடர்பில் தேசிய சட்டம் மற்றும் கடந்த கொள்கை முன்மாதிரி என்பன பொருத்தமானவை. காணியை மீட்டல் மற்றும் கையகப்படுத்தல் என்பவற்றுக்கான தெளிவான நடைமுறைகளை சட்டம் குறிப்பிட்டுக் கூறுகிறது. வழமையில் ஒரு 'பொதுநல நோக்கம்' எனக் குறிப்பிட்டு, பொதுமக்களின் பெரும் நன்மைக்காக காணியை மீட்பதாக அல்லது கையகப் படுத்துவதாக அரசு அறிவிக்கலாம். தேசிய சட்டத்தில் பொதுநல நோக்கம் என்பதன் பொருள்கொள்ளுதலுக்காக சிறிய இடைவெளியே உள்ளது, ஆனால் மிக அண்மைய முன்தீர்ப்புச் சட்டம், பொது நோக்கம் என்பதன் பொருள் கொள்ளுதல் மறைமுகமான நோக்கங்கள் அடிப்படை யிலான தீய எண்ணத்தில் காணிகளின் கையகப்படுத்தல்களை அனுமதித்தல் கூடாது என தேவைப்படுத்துகின்றது.[5] அதனால், காணிகளின் கையகப்படுத்தல்களுக்கும் மற்றும் பாரிய தேசிய குறிக்கோள்களுக்கும் இடையில் ஒரு தெளிவான தொடர்பு ஸ்தாபிக்கப்படல் வேண்டும். இட நெருக்கடியைக் குறைப்பதற்காக நகரத்தின் இடம் சார்ந்த நிலைமாற்றங்கள் அவசியமாக உள்ள வேளையில், பேண்தகு சுற்றாடல் மற்றும் சிறந்த வீட்டுவசதி உட்கட்டுமானம், வசதிகுறைந்த குடியிருப்புகளின் மேம்படுத்தல் உட்பட நகரப் புத்தமைத்தல் செயன்முறைகள், என்பன எவரொருவரும் முறையற்ற வகையில் பாதிப்புகளுக்கு ஆளாகவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு போது மான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறித்துரைப்பதாகவும் இருத்தல் வேண்டும்; 'பொது நோக்கம்' என்பது ஒரு சிலருக்கு சாதகங்களை அளித்தும் மற்றைவர்களுக்கு முறையற்ற வகையில் பாதிப்புகளையும் ஏற்படுத்தாது, நகரில் அனைவருக்கும் சமனான உரித்துகளை அளிப்பதாக இருத்தல் வேண்டும்.

1950 ஆம் ஆண்டின் காணி கையகப்படுத்தல்கள் சட்டம், தனியார் காணிகள் மற்றும் அரசிடமிருந்து சேவகத்தின் கீழ் அளிக்கப்பட்ட அரச காணிகளை என்பவற்றின் கையகப் படுத்தல்களுக்கான நடைமுறைகளைக் குறித்துரைக்கிறது.[6] அதன் முக்கியமான அம்சங்கள் உத்தேசிக்கப்பட்ட கையகப்படுத்தலின் அறிவித்தல், சம்பந்தப்பட்ட காணிகள் தீர்மானிக்கப்பட்ட பொது நோக்கத்துக்கு பொருத்தமான வையா என்பது தொடர்பான ஆய்வு, இழப்பீடுகள் தீர்மானிக்கப்படும் நடைமுறைகள் மற்றும் இழப்பீடுகளைத் தீர்ப்பதற்கான விசாரணைச் செயன்முறை என்பவற்றை உள்ளடக்குகின்றன. வனாத்தமுல்ல வெளியேற்றல் செயன் முறையில் காணி கையகப்படுத்தல் சட்டத்தின் அப்பட்டமான புறக்கணித்தல், ஸ்தாபிக்கப்பட்ட சட்டத்தின் மீறுதல் மட்டுமன்றி,

---

[4] எதிர்காலத்துக்கான மகிந்த சிந்தனைப் பார்வை, இலங்கை அரசாங்கம் (2010), பகுதி 7-3

[5] R.K.W. குணசேகரவின் (2006) அரச காணிகள் மீதான தெரிவு செய்யப்பட்ட சட்டங்கள், சட்ட சங்க பிரசுரிப்பு, கொழும்பு,இலங்கை, ப.187

[6] அரச காணிகளை மீட்பதற்கான நடைமுறை, 1979 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க அரச காணிகள் (உரிமை மீட்டல்) சட்டத்தில் உள்ளடங்கியவாறு, அவை சட்டவிரோதமாக உடமை கொள்ளப்பட்டிருக்குமாயின், அனுமதியின்றி அல்லது சட்ட விரோதமாக உரிமை கொண்டிருக்கும் நபர்களிடமிருந்து அரச காணிகளை மீட்பதற்கு ஏற்பாடளிக்கிறது. அரச காணியில் அத்துமீறல் மூலமாக உரிமை கொள்ளுதல் மற்றும் குடியிருத்தல் உட்பட, 'ஒரு செல்லுபடியாகும் அனுமதி அல்லது ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்துக்கு அமைவாக அரசின் எழுத்து மூலமான ஏனைய அதிகாரம் என்பவற்றுடனான உரிமை கொள்ளுதல் மற்றும் குடியிருத்தல் தவிர்ந்த, ஏனைய ஒவ்வொரு வகையான உரிமை கொள்ளுதல் அல்லது குடியிருத்தலும் அனுமதியற்ற உரிமை கொள்ளல் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

சிலரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மற்றையவர்கள் மீது கையாளப்படக்கூடிய நடைமுறைகளின் எழுந்தமானதும் மற்றும் எதேச்சாதிகாரமானதுமான உபயோகத்துக்கும் அனுமதிக்கின்றது. மேலும், அது இலங்கை அரசியலமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகள் சட்டநியாயத்துக்கும் முரணானது. ‘அனைத்து நபர்களும் சட்டத்தின் முன்னால் சமனான வர்கள் மற்றும் சட்டத்தின் சமனான பாதுகாப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்‘ என அரசியலமைப்பு தேவைப் படுத்துகின்றது.

மேலும், இலங்கையின் தேசிய தன்னிச்சையற்ற மீள்குடி யமர்த்தல் கொள்கை (NIRP), அபிவிருத்தியினால் உந்தப்பட்ட இடம்பெயர்தலினால் (அல்லது வெளியேற்றுதல்கள்) பாதிக்கப்பட்ட ஆட்கள் அவர்களது மீள்குடியேறும் இடங்களில் தங்களை மீள்நிறுத்துவதிலான சவால்களைக் கவனம் செலுத்துவதற்கான ஒரு கலந்துரையாடப்பட்ட செயன்முறைக்கு ஏற்பாடளிக்கிறது. அது காணி கையகப் படுத்தல் சட்டத்தின் மேலிருந்து கீழ்நோக்கிய அணுகு முறைக்கு கவனம் செலுத்துவதற்கு நாடுவதுடன் காணி கையகப்படுத்தல் மற்றும் மீள்குடியமர்த்தலின் நெகிழ்ச்சியற்ற போக்கைத் தணித்து, காணி இழப்பை விட ஏனைய இழப்புக் காரணிகளின் இழப்பீடுகளுக்கான சாத்தியத்தை அதிகரிக்கின்றது. எனவே, அவர்களது மீள்குடியமர்த்தப் படும் இடங்களில் அவர்கள் முகங் கொடுக்கும் சாத்தியமான சவால்கள் குறித்து வெளியேற்றப்படுவோர்களுடன் எந்தவொரு அர்த்தமுள்ள வகையிலான ஈடுபாடுகளின் வெளிப் படையான அக்கறையின்மை பின்னடைவானதுடன் தேசிய மட்டத்தில் முன்னேற்றமான கொள்கை வகுத்தலின் நோக்கங்களைத் தோற்கடிக்கின்றது.

ஒப்புரவானதும் மற்றும் கட்டுப்படியானதுமான வீட்டு வசதிக்கான ஒரு சாத்தியமான சுற்றாடலில், நகர மயமாக்கலின் ஒரு அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றமை, ஏனைய விடயங்களிடையே, சமூகத்தில் மிகவும் இடர்படுநிலையிலுள்ள மற்றும் ஓரம்கட்டப்பட்டவர்களையும் எட்டும் முன்னேற்றமான அபிவிருத்தி நிறுவனங்களைத் தேவைப்படுத்துகின்றது. வசதிகுறைந்த குடியிருப்புகளில் குடியிருப்பவர்கள் பல தலைமுறைகளாக நகரின் ஒரு அம்சமாக இருந்துள்ளனர் என்பதோடு அதன் உயிர்ப்புக்கும் மற்றும் பன்மைத்துவத்துக்கும் பங்களித்து உள்ளனர். அவர்கள் புறந்தள்ளப்படாதிருப்பதற்கும் மற்றும் கொழும்பு நகரின் ஏனைய குடியிருப்பாளர்கள் போன்றே அதன் அபிவிருத்தியிலிருந்து நன்மை பெறுவதற்கும் உரிமை கொண்டுள்ளனர்.

திருவாட்டி. ரசிக்க மென்டிஸ்[7]

[7] ரசிக்க மென்டிஸ், சட்டத்தரணி , LLB, LLM, Pg.Dip (Econ), ஒரு சுயாதீனமான சட்ட மற்றும் கொள்கை ஆலோசகர். mendism@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளப்பட முடியும்.

## மீனவ மக்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட நாடு தழுவிய போராட்டம்

### “மீனவர்களின் பிரச்சினைகளுக்கு எங்களுக்கு உடனடியான தீர்வுகள் தேவை” – நாடு முழுவதிலுமான மீனவச் சமூகங்கள்




உழைக்கும் வர்க்கத்தின், முக்கியமாக முறைசாராத் துறையிலுள்ள மீனவர்களும் மற்றும் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களும் அவர்களது வாழ்வாதாரங்களுக்காக பல்வேறு வகையான சவால்களுக்கு முகங் கொடுத்த போதிலும், கடந்த சில வருடங்களின் போது தங்களது எதிர்த்து நிற்கும் நிலையை அவர்கள் வெளிக் காட்டினர். விசேடமாக அவர்களை ஒன்றிணைத்தும் மற்றும் அவர்களது அடிப்படைத் தேவைகள், நன்னிலைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகளுக்காக ஆதரித்துப் பேசுவதற்கு இயலச் செய்கின்ற ஒரு தலைமைத்துவம் தங்களுக்குள்ளேயே இருக்குமாயின், நெருக்கடிகளை வெல்வதற்கான ஆற்றல்களை அவர்கள் கொண்டிருப்பதை, அவர்களது அனுபவங்கள் அவர்களுக்கு போதித்தது.

உழைக்கும் வர்க்கத்தை எதிர்கொண்ட பிரச்சினைகள் என்ன? பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், “வெள்ளை வான் அச்சுறுத்தல்”, துரோகிகளாக முத்திரை குத்தப்படும் தலைவர்களுக்கு எதிரான ஊடகங்களின் கறை பூசும் பிரச்சாரங்கள், தலைவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தொல்லை ஏற்படுத்தல், கடத்தல்கள், கொலைகள் அல்லது காணாமற் போதல்கள் போன்றவை ஆரம்பத்தில் அவர்களது உறுதிப்பாட்டுக்கு ஒரு ஆர்வமற்ற நிலையை உருவாக்கியது. இந்த வகையான அடக்குமுறை அவர்களை




மௌனம் காப்பதற்கு பலவந்தப்படுத்தியிருக்க முடியும்; ஊடகவியலாளர்கள் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு முரணாக ஏதேனையும் எழுதுவதற்கு முன் இரண்டு தடவை சிந்திப்பதற்கு அச்சுறுத்தப்பட்டனர். "மாற்றுக் கருத்துக்களுக்கு பூஜ்ய மட்டத்திலான சகிப்புத்தன்மை" என்பது அரசின் கொள்கையாக காணப்படுகிறது என்பதுடன், இந்தக் கொள்கை ஊடக அறிக்கையிடலையும் கூட வழிகாட்டு வதாகத் தோன்றுகிறது.

மேலே குறிப்பிட்ட முரண்பாடுகள் அவர்களது நாளாந்த வாழ்வாதார மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு மேலதிக மானதாகும். அத்தகைய பிரச்சினைகள் வருமானமிழப்பு, எரிபொருள் விலையேற்றம், அவர்களது காணி உரிமைகளின் மீறல்கள், மற்றும் இந்திய இழுவைப் படகுகளிலிருந்தான மரண அச்சுறுத்தல்கள் ஆகிய அனைத்தும் மீனவ சமூகத்தின் கௌரவத்தை சூறையாடுவதற்கு பயன் பட்டன. இழுவைப் படகுப் பிரச்சினை யுத்தத்தின் போது ஆரம்பித்து இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளது. இந்தத் திருட்டுத்தனமான வேட்டை இலங்கைக் கடலில் நடாத்தப் படுகின்றதுடன், வாரத்தில் மூன்று நாட்கள் எங்களது ஆட்புல எல்லைக் கடலிற்குள் அத்துமீறுவதன் மூலமாக உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரங்களைச் சீர்குலைக்கும் அதேவேளை, அந்நியச் செலவாணி வருமானத்தில் பெறுமதியான நாட்டின் கடல் வளங்களை (இறால்கள், கடலட்டைகள் மற்றும் மீன்கள்) இந்திய மீனவர்களின் வலைகள், படகுகள் மற்றும் இயந்திரங்கள் வெறுமையாக்குகின்றன, இதன் மூலம் எங்களது மீனவர்களுக்கு உடல்ரீதியான அச்சுறுத்தல்களால் மோச மாக்கப்பட்ட மேலும் சமூக அமைதியின்மையை அவை உருவாக்குகின்றது.

இதற்கு மேலதிகமாக, எங்களது கடல் எல்லைக்குள் மீன்பிடி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதி சீனக் கப்பல்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. கூட்டு நடவடிக்கைகள் என்ற பெயரில், எங்களது கடற் பகுதிகளுள் சீனக் கப்பல்கள் அத்துமீறுவதுடன் அவர்கள் பிடித்த மீன்களை துறைமுகங்களில் இறக்குகின்றனர்; இந்த மலிவான தெரிவினால் கவரப்பட்ட உள்ளூர்க் கொள்வனவாளர்கள் அவர்களுடன் இணைவதற்கு விரும்புவது, உள்ளூர் மீனவர்கள் அவர்களது மீன்களைக் குறைவான விலைக்கு விற்பதற்கு நிர்ப்பந்தித்து அவர்களை ஓரங் கட்டுகின்றது. உள்ளூர் மீனவர்களின் பங்களிப்பு கடுமையான வகையில் குறைந்துள்ளதுடன் உண்மையில் அவர்கள் மீன்பிடித் தொழிலிருந்து விலகிச் செல்லும் நிலையில் உள்ளனர்.

எவ்வாறாயினும், உள்ளூர் மீனவ சமூகத்தைப் பாதுகாக்கும் முகமாக சம்பந்தப்பட்ட அதிகாரங்களினால் இந்த நிகழ்வுகளுக்கு எதிராக தீவிரமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு உண்மையில், மீனவத் தலைவர்கள், தொழிற் சங்கங்கள் மீதான அடக்குதல், வெளிப்படையானதாக காணப்பட்டதோடு பின்னோக்கான கொள்கைகளை ஆதரிப்பதாக மீனவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்துக் காரணிகள் காரணமாக மீனவர்கள் கடந்த இரண்டு வருடங்களின் போது பரவலான துன்பங்களைச்

சகித்துக் கொண்டனர், ஆனாலும் அவர்களது நெருக்கடிகளைப் போதுமான வகையில் கவனம் செலுத்துவதற்கு ஒரு ஒருங்கிணைந்த, உறுதியான, கூட்டிணைந்த போராட்டம் ஏற்பாடு செய்யப் படவில்லை.

பெப்ரெவரி 2012 இல், எரிபொருள் பிரச்சினை தொடர்பாக ஒரு போராட்டம் நடைபெற்றது, அதில் இராணுவத்துடனான ஒரு மோதலைத் தொடர்ந்து மீனவரொருவர் கொல்லப் பட்டதுடன் ஐந்து மீனவர்கள் உடல் வலுக்குன்றியவர்களாக்கப்பட்டனர். எரிபொருள் மானியங்களை இலங்கை அரசாங்கத்தால் தொடர்ச்சியாக வழங்க முடியாதென்பதை புரிந்து கொள்வதற்கு மீனவர்கள் போதுமான




புத்தி சாதுரியம் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் எதிர்வு கூறியவாறே, ஜனாதிபதினாலேயே இணங்கிக் கொள்ளப் பட்ட மானியங்களை வழங்குவது கைவிடப்பட்டு இப்பொழுது ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது.

போராட்டத்தின் மற்றொரு காரணி காணியாகும். கரையோரங்களில் வாழும் மக்களுக்கு மேலதிகமாக, நாட்டின் நகரங்கள் மற்றும் ஏனைய பகுதிகளில் வாழும் மக்கள் அபிவிருத்திச் செயல்திட்டங்கள், விசேட பொருளா தார வலயங்கள், நகர் அழகுபடுத்தல் போன்றவை காரணமான இடம்பெயர்தல்களால் ஏற்பட்ட சவால்களுக்கு முகங் கொடுக்கின்றனர். உத்தேசிக்கப்பட்ட சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் சிறிய அளவு மீன்பிடி மீனவர்களின் வாழ்வாதாரங்களைக் கடுமையான வகையில் அச்சுறுத் தலுக்குள்ளாக்கியுள்ளது. மீனவர்கள் தங்களது கரையோர நிலங்கள், கடலேரிகள், கண்டல் காடுகள், மற்றும் நீர்த்தேக்கங்கள் என்பவற்றை இழந்துள்ளனர், இதன் தாக்கமாக அவர்களது வாழ்வாதாரங்களுக்கான மூல வளங்களாக அவற்றை அணுகும் வழிமுறைகளையும் இழந்தது நிற்கின்றனர். இதில் இன்னமும் மோசமானது, இத்தகைய அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் நாடு முழுவதிலுமான பிரஜைகளின் ஒட்டுமொத்த உணவுப் பாதுகாப்பினை விட்டுக்கொடுப்பதாகும்.

கொழும்பு நகரில், இராணுவ இணக்குவித்தல் மூலமாக தங்களது காணிகளை விட்டு விலகிச் செல்வதற்கு மக்கள் அச்சுறுத்தப்பட்ட ஒரு தொகையான சம்பவங்கள் உள்ளன.

மீனவர்கள், விவசாயிகள் அதே போன்று தங்களது ஆதனத்திலிருந்து வெளியேற்றப்படும் நிலையிலுள்ள நகரக் குடியிருப்பார்கள் ஆகியோர்களின் காணி உரிமைகள் மீது நாங்கள் கவனம் செலுத்துவதற்கு விரும்புகிறோம். வட மாகாண மீனவர்கள் அவர்களது வாழ்வாதாரங்களை மீளப்பெற உதவுவதற்கு நாம் விரும்புகிறோம். ஒரு கூட்டு நடவடிக்கைக்காக அந்த மக்கள் அனைவரையும் ஒன்றாகக் கொண்டு வந்து எதிர்வரும் மாதங்களில் அவர்களது நோக்கத்துக்காக பல்வேறு உத்திகளுடன தொடர்ச்சியாகப் போராடுவதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

"எரிபொருள் மானியத்தை தொடர்ச்சியாக அளிப்பதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுப்பதற்கு நாங்கள் ஒன்றிணைந்து விரைவான நடவடிக்கையை எடுக்க வில்லையாயின், ஆயிரக் கணக்கான சிறியளவிலான மீன்பிடிக்கும் மீனவர்கள், தங்களது ஒரேயொரு வாழ்வாதாரமான மீன்பிடித்தலைக் கைவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவர்", எனக் கூறினார் பருதல்பொல, குடாமடுவெல எனுமிடத்திலிருந்தான ஒரு சிறியளவிலான மீன்பிடி மீனவரும் மற்றும் புத்தள மாவட்ட மீன்பிடி ஒருமைப்பாட்டு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான லோயல் பீரிஸ்.

தேசிய மீன்பிடி ஒருமைப்பாட்டு இயக்கம் (தே.மீ.ஒ.இ) தற்போதைய் பொருளாதார மாதிரிகளுக்கு எதிராகவும் மற்றும் காணி அபகரித்தல்களை நிறுத்துவதற்கு, எரிபொருள் மானியங்களை வழங்குவதற்கு, இலங்கைக் கடற் பரப்பிலிருந்து வெளிநாட்டுக் கப்பல்களை அகற்றுவதற்கு, இலங்கை மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களுக்கு சிறந்த விலைகள் கிடைப்பதற்கான பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு, மற்றும் உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் உடனடியான மீள்குடியேற்றத்துக்கான அழுத்தத்திற்குமாகவென ஒரு ஒருங்கிணைந்த பிரச்சாரங்களை நடாத்துவதற்கும் தீர்மானித்தது.

## திட்டத்தின் குறிக்கோள்கள்:

- மேலுள்ள பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியும் மற்றும் மீனவர்கள், விவசாயிகள் மற்றும் தற்போதைய அபிவிருத்தி மாதிரியில் உள்ள உழைக்கும் வர்க்கத்தினர் ஆகியோர்கள் தொடர்பாக தீர்வுகளைக் காண்பதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு அழுத்தங்களை அளிப்பது பிரதான இலக்காகும்;

- உழைக்கும் மக்கள் வர்க்கம், தொழிற் சங்கங்கள், சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் மத ரீதியான குழுக்களை ஒன்றிணைத்து அந்தணி பெர்ணாந்துவை நினைவு கூர்ந்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மீது கவனத்தை ஈர்த்தல்;

- ஒரு பொதுவான பிரச்சாரத்தின் கீழ் அவர்களை மேலும் ஐக்கியப்படுத்தும் முகமாக அரசியல் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்துவதற்கு பரந்தளவிலான பொதுமக்களுக்கு ஒரு பிரச்சார நிகழ்ச்சி நிரலை சமர்ப்பித்தல்; மற்றும்

- அதிகாரத்துக்கு வரும் போது சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளால் இந்த விடயங்கள் கவனம் செலுத்தப்படும் முகமாக பரந்த அரசியல் அரங்கிற்கு மக்களின் பிரச்சினைகளை முன் கொண்டு செல்லுதலும் மற்றும் மக்களின் நிகழ்ச்சிநிரலை கூருணர்வுப்படுத்தல்.

## பிரதான கோரிக்கைகளும் மற்றும் பிரச்சாரத்தின் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினைகள்:

1. பெப்ரெவரி 2012 இல் எரிபொருள் விலைக்கான போராட்டத்தின் போது இணங்கிக் கொள்ளப்பட்ட தவறான எண்ணத்தையளித்த எரிபொருள் மீனவர்களுக்கான எரிபொருள் மானியங் களுக்குப் பதிலாக சலுகை அடிப்படையிலான எரிபொருள் விலைகளுக்கான ஒரு திட்டமிட்ட அணுகுமுறையின் தேவை;

2. இலங்கைக் கடற்பரப்பிலிருந்து வெளிநாட்டுக் கப்பல்களை, பிரதானமாக எங்களது பிரத்தியே கமான பொருளாதார வலயத்தினுள் (EEZ), இலங்கைக் கொடியுடன் மீன்பிடியில் ஈடுபடுகின்ற சீன நாட்டுக் கப்பல்களை அகற்றுதல்;

3. காணி அபகரித்தலை நிறுத்துதல் மற்றும் சுற்றுலா, உட்கட்டுமானம் மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் என்பவற்றுக்காக அபிவிருத்தி என்ற பெயரில் அபகரிக்கப்பட்ட நிலங்கள், காடுகள், கடல்கள் மற்றும் உள்நில நீர்ப் பரப்புகள் என்பவற்றை விடுவித்தல்;

4. காணிகளை விடுவித்தலும் மற்றும் யுத்த காலத்திலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் களை மீளக்குடியமர்த்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகள் மூலமாக அவர்களது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கும் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்தை மீளவாரம்பிப் பதற்கும் அனுமதித்தல்;

5. இந்திய இழுவைப் படகுகள் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு, இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான தற்போதைய பேச்சுவார்த்தையில் அது போதுமான வகையில் கவனம் செலுத்தப்படுவதாக இல்லை எனக் காணப்படுகின்றது;

6. கைது செய்யப்படும் போது இலங்கை மற்றும் இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு ஒரு பயனுறுதியான மூலோபாய இடையீடு; மற்றும்

7. உள்ளூர் மீன் உற்பத்தியாளர்களுக்கு ஒரு நியாயமான, சிறந்த வி லை.

## தே.மீ.ஒ.இ (NAFSO) ஆல் தலைமைத்துவம் வழங்கப்பட்ட தேசிய மீன்பிடி நடவடிக்கைக் குழு பிரச்சாரத்தினொரு பகுதியாக பின்வரும் நடவடிக்கைகளை நடாத்தியது:

- கூட்டணிகளை உருவாக்குதல் - கூட்டு நடவடிக்கைகளுக்காக மக்கள், தொழிற் சங்கங்கள், சிவில் சமூக ஸ்தாபனங்கள், வெகுஜன அமைப்புகள், அரசியல்வாதிகள், மத ரீதியான குழுக்கள் மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் என்பவற்றை ஒன்றுபடுத்தித் திரட்டுதல்;

- விழிப்புணர்வுப் பிரச்சாரம் - பல்வகைப்பட்ட பிரச்சினைகளைக் குறிப்பிடுகின்ற அச்சிடப்பட்ட கைப்பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் என்பன சிலாபத்திலும், நீர்கொழும்பு சிலாப வீதி மற்றும் தலவில ï சிலாபம் கடற்கரை வீதியில் காட்சிப்படுத்தப்படது;

- பிரச்சாரம் - 4 பிரதான இடங்களில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்தது (போராட்டத்தின் பிரதான நிகழ்வு இடமாக சிலாபம் உட்பட, யாழ்ப்பாணம், காலி மற்றும் அறுகம்பை). அந்தணி பெர்ணாந்துவிற்கான ஒரு



நினைவுகூரல் நிகழ்வும் மற்றும் ஒரு கருத்தரங்கும் சிலாபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், அங்கே ஊடக வெளியீடுகள், சமூக ஊடக விழிப்புணர்வு மற்றும் சமூக அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன;

- பயிற்சி மற்றும் செயற்றிறனைக் கட்டியெழுப்புதல் - வருடம் முழுவதுமாக விடயங்கள் சார்ந்த பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு தலைவர்கள், செயற்பாட்டாளர்கள், பெண்கள் மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபன குழுக்கள் என்பவற்றுக்கு அறிவூட்டுதல்.

நீர்கொழும்பு, ஸ்ரீ விமுக்தி மீனவப் பெண்கள் ஸ்தாபனத்தின் தலைவியான, வினீதா பெர்ணாந்து கொல்லப்பட்ட மீனவர் தலைவர் அந்தணி பெர்ணாந்துவின் குடும்பத்தாருக்கு தனது கரிசனைகளையும் மற்றும் ஆதரவையும் வெளிப்படுத்தினார். “தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில் நாளாந்தம் வாழ்க்கை நடாத்துவதில் கஷ்டங்களை நாம் அனுபவிக்கிறோம். எனது கணவர் சம்பாதிக்கும் பணத்தில் வாழ்வதிலான கஷ்டம் இன்றுள்ள பொருளாதார நெருக்கடியின் ஒரு தெளிவான உதாரணமாகும். ஒரு இல்லத்தரசியாக இதனை நான் நன்கு அறிவேன். அந்தணியின் மனைவி, அவரது குடும்பத்தின் சீவியத்துக்கு எந்தளவிற்கு கஷ்டங்களுக்கு முகங் கொடுக்கிறார் என்பதை என்னால் உணர முடிகிறது”, என்று அவர் கூறினார்.

இன்று மீனவக் குடும்பங்கள் முகங் கொடுக்கும் முக்கியமான பிரச்சினை இதுவாகும்.

மீனவத் தலைவர்கள், கத்தோலிக்கத் தேவாலயங்களினால் ஆதரவளிக்கப்பட்ட ஒரு மீனவர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை பெப்ரெவரி 15 பிரச்சாரத்திற்கு, பின்னர் நடாத்தி எரிபொருட்களுக்கான விலைக் குறைப்பை அல்லது மீனவர்களுக்கு ஒரு எரிபொருள் மானியத்தைக் கோரி நடாத்தியதுடன், நீர்கொழும்பில் அது மீனவத் தலைவர் லானி பெர்ணாந்துவின் ஒரு உண்ணாவிரதத்திற்கும் இட்டுச் சென்றது.

“மார்ச் 28, 2014 அளவில் எரிபொருள் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வை நாங்கள் பெறாவிட்டால், ஒரு உண்ணாவிரதத்தை நடத்தாமல் மீனவர்களால் முகங் கொடுக்கப்படும் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்டவர்களின் கண்களைத் திறப்பதற்கு வேறு வழியில்லை”.

சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் சார்ந்த இந்தக் கரிசனைகள் சம்பந்தப்பட்ட அதிகாரங்களினால் கவனம் செலுத்தப்படுமா என்பதே, மீனவர்களுக்கு எஞ்சியுள்ள ஒரு முக்கியமான கேள்வியாகும்.

ஹேர்மன் குமார,

ஒருங்கிணைப்பாளர், தே.மீ.ஒ.இ **(NAFSO)**

## வடக்கில் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியா?

ஜூன் 2013 இல், இலங்கையிலுள்ள ஐ.நா அகதி களுக்கான ஆணையகம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அது மேற்கொண்ட ஒரு விரிவான மதிப்பாய்விலிருந்து தரவுகளை வெளியிட்டது. இந்த மதிப்பாய்வு 463,924 தனிப்பட்டவர்களை உள்ளடக்கிய 138,651 மீள்திரும்பிய குடும்பங்களுக்கான ஒரு மாதிரியாக 917 பதிலிறுப்பவர்களை நேர்கண்டது.

மூன்றரை வருட அமைதி மற்றும் பாரிய அபிவிருத்திச் செயல்திட்டங்களுக்கு முரணாக, அப்பிரதேசங்களிலுள்ள பலரும் ஒழுங்ககாக ஒரு வேளை உணவை உட் கொள்வதற்கு இன்னமும் கஷ்டங்களை எதிர்நோக்குவது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு அதிர்ச்சியளிக்கும் அம்சமாக இருந்தது.

சனத்தொகையின் மூன்றிலொரு தொகையினர் உணவுப் பாதுகாப்பின்மையை உணர்கின்றனர் என மதிப்பாய்வில் கண்டறியப்பட்டது. "உணவுப் பாதுகாப்பு ஒரு கவலை அளிக்கும் விடயமாகக் காணப்பட்டது. பதிலளித்தவர்களில் 65% மட்டுமே தாங்கள் போதுமான உணவைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்தனர்", என அறிக்கை குறிப்பிட்டது.

சில மாவட்டங்களில் இந்த வீதம் அதிகமாக இருந்தது. திருகோணமலையில் நேர்காணப்பட்ட மக்கள் தொகையின் அரைப்பங்கிற்கும் அதிகமானவர்கள் தங்களுக்கு போதுமான உணவில்லை என்று கூறினர், முல்லைத்தீவில் இது 47% உணரப்பட்ட அதேவேளை கிளிநொச்சியில் இந்த வீதம் 40% ஆக இருந்தது.

இந்த மதிப்பாய்வின் பின்னர் காலமும் கடந்து போயுள்ளது, இருப்பினும் நிலைமைகளில் மாற்றம் ஏற்படவில்லை.

அனைத்தையும் போன்றே வட மாகாணத்தில் உணவுப் பாதுகாப்பு மட்டங்களைக் கண்டறிவதிலான பிரச்சினை போதுமான தரவுகளில்லாமையாகும். 2014 இன் ஆரம்ப பகுதியில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக் களத்தின் தரவுப்படி, தேசிய வேலையில்லா வீதம் உழைப்போர் சக்தியின் 4% ஆகும், ஆனாலும் இத்தரவு வட மாகாணத்தை பெரிதும் உள்ளடக்கியதாகவில்லை.

வட மாகாணத்தை உருவாக்கும் ஐந்து மாவட்டங்களில் மூன்று மாவட்டங்களான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் வவுனியா என்பவற்றுக்கு உத்தியோகபூர்வ தரவுகள் இல்லை. தரவுகள் காணப்படும் இரண்டு மாவட்டங்களில் வேலையில்லா வீதம் தேசிய வீதத்தை விட இரண்டு மடங்காக மன்னரில் 8.1% ஆகவும் மற்றும் கிளிநொச்சியில் 9.3% ஆகவும் இருந்தது. இந்த தரவு எதனைக் கருதியதென்றால், வடக்கிலுள்ள மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ளவர்களை விட வறிய நிலையில் உள்ளனர் என்பதையாகும்.

யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட அபிவிருத்திக்கான பருத்தித்துறை நிலையம் என்பதற்கு தலைமை வகிக்கும் பொருளியலாளர் முத்துக்கிருஷ்ணா சர்வானந்தனின் கூற்றுப்படி, வேலையில்லா வீதத்தைக் கணிப்பதற்கு கடுமையான வரையறைகள் உபயோகிக்கப்பட்டிருப்பின் தேசிய வேலையில்லா வீதம் 18% ஆகவும் வடக்கில் அது மிகவும் அதிகமான 32.8% ஆகவும் இருந்திருக்கலாம்.



அத்தகைய உயர் உணவுப் பாதுகாப்பின்மை மட்டங்களுக்கான காரணம் முக்கியமாக, பிரதேசத்தில் மக்களின் வருமானம் அதிகரிக்கவில்லை என்பதாகும். 2014 நடுப்பகுதியளவில் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகை வடக்கில் அபிவிருத்திப் பணிகளுக்காக செலவிடப்படும் என இக்கட்டுரையாசிரியருக்கு அரசாங்க அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளர். ஆனால், அத்தகைய நிதிகள் பெரு மளவிற்கும் நெடுஞ்சாலைகள், மின்சார விநியோகம் மற்றும் நீர் செயல்திட்டங்கள் மீது செலவிடப்படுகையில், ஒரு மிகச் சிறிய அளவிலேயே வேலை உருவாக்கத்துக்கான பணிகள் இடம் பெற்றுள்ளன.

வடக்குப் பொருளாதாரத்தின் இரண்டு முக்கிய பாரம்பரிய தங்கியிருத்தல்களான விவசாயம் மற்றும் மீன்பிடி என்பன அவற்றுக்கு உரிய தூண்டுதல்களைப் பெறவில்லை. அதன் தாக்கம்

இதற்கான பதிலைக் கூறுகிறது.

2012 இன் பிற்பகுதியில், வவுனியாவிருந்து வட கிழக்காக 30 கி.மீ தொலைவிலுள்ள மாமடுவ எனும் கிராமம் ஒரு கடுமையான வரட்சியின் கோரமான அழிவுகளுக்கு முகங் கொடுத்தது. 1985 இல் அவ்விடத்தை விட்டு ஓடிய பின்னர், இப்பொழுது சுமார் 40 குடும்பங்கள், பெரும்பாலானவை சிங்களவர்கள், மீள்திரும்பியுள்ளன.

அவர்களுக்கு புதிய வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன, ஒரு பாலம் உள்ளடங்கலான புதிய வீதி கட்டப்பட்டுள்ளது, அங்கே ஒரு பாடசாலை கூட செயற்படுகின்றது. ஆனால் கிணறுகள் வரண்டும் மற்றும் அவர்களது பயிர்களின் விளைச்சல் ஒரு தடவை வெள்ளம் காரணமாகவும் மறுதடவை வரட்சி காரணமாகவும் அடுத்தடுத்து பொய்த்துப் போனதில் கிராமத்தவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். அவர்களது சொந்தக் கிராமத்திலான வாழ்க்கை அவர்கள் முகங் கொடுக்கும் இடர்களுக்கு பெறுமதியானது தானா என்பது நிச்சயமில்லாததினால் சிலர் வவுனியாவின் தெற்குக்கு திரும்பவும் சென்று உறவினர்களுடன் வாழ்வது பற்றியும் பேசினர்.

அவர்களது பிரதான வருமானத் தோற்றுவாயான விவசாயத்துக்கு அரிதாகவே ஏதேனும் உதவிகள் வழங்கப் பட்டன என்பது அவர்களது பிரதான கரிசனையாக இருந்ததுடன், அவர்கள் மீள்திரும்பியதிலிருந்து மாற்றமடையும் காலநிலை மாதிரிகளால் மேலும் கீழுமாக ஒரு கயிற்றின் முனையில் கட்டப்பட்டு இழுக்கப்படுபவர்களாக உணர்ந்தனர். இங்கே விவசாயத்தை மீளவாரம்பிப்பதற்கு எந்தவொரு அர்த்தமுள்ள கவனங்களும் இருக்கவில்லை.

உட்கட்டுமானங்கள் மீது மில்லியன் கணக்கான நிதிகள் செலவிடப்பட்டு ஆனால் வருமானங்களை அதிகரிப்பதற்கு ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்தப்பட்ட கவனங்களே செலுத்தப் படுகின்ற அல்லது மீளகுடியேற்றத்திற்குப் பிந்திய உடனடியான உதவிகளை எப்படிக் குறைநிரப்புவது எனக் கண்டறிவதிலான இந்த முரண்படுதல் அநேகம் கவலை அளிப்பதாகவுள்ளது.

மீள்திரும்பியவர்கள் நல்லதொரு விளைச்சலைப் பெற்றுக் கொண்டாலும் கூட, அதனால் நன்மையடைவோர்கள் அவர்களல்ல என்பதை இந்த சந்தை முறைமை உறுதி செய்யும். இது 2011இல் நெடுங்கேணிக் கிராமத்தில் நிகழ்ந்தது. கிராமத்தவர்கள் ஒரு அதிகரித்த கத்தரி விளைச்சலைப் பதிவு செய்தபோது, அவர்கள் ஒரு நல்ல இலாபத்தை நம்பி எதிர்பார்த்தனர்.

நெடுங்கேணிக் கிராமத்தை புளியங்குளம் ஊடாக தெற்குக்கு இணைக்கும் பாதை மிகவும் மோசமான நிலையிலிருந்தது. மொத்த வியாபாரிகள் இயலுமான கடைசித் தருணம் வரையும் வவுனியாவிலிருந்து நெடுங்கேணிக்கு லொறிகளை அனுப்புவதை தடுத்து வைத்திருந்தனர். அவர்கள் ஒரு கிலோ கத்தரிக்காயை ளூ.5 இற்கு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து வவுனியாவில் கிலோ ளூ.70க்கு விற்பனை செய்தனர்.

மாற்றமடையும் காலநிலை மாதிரிகள் காரணமாக மோசமடையும் உணவு பற்றாக்குறை நிலைமை வடக்குக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல, என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். நவெம்பர் 2013 இற்கும் மார்ச் நடுப்பகுதிக்கும் இடையிலான அண்மைய வரட்சி, நெற் பயிரின் எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலின் பத்திலொரு பங்கை இழக்கப் பண்ணியிருக்கலாம். இவற்றோடு சேர்ந்ததாக ஏனைய பாதிப்புகளும் இருக்கலாம், அதிகரிக்கும் உற்பத்திச் செலவு காரணமாக குடும்பங்கள் மின்சாரத்துக்காக அதிகரித்த தொகையை செலுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகையில், அதனாலான அழுத்தம் விலை கூடிய உணவுகளை தவிர்க்கச் செய்யலாம், உதாரணம் கோழியிறைச்சியை கருவாட்டால் மாற்றீடு செய்தல்.

உணவுப் பாதுகாப்பை இலகுபடுத்துவதற்கான மிகவும் வெளிப்படையான ஒரு காரணி உள்ளது, அதுவே நீர் என்கிறார், விவசாயத் திணைக்களத்திலுள்ள பிரதான காலநிலை அதிகாரி, திரு.ரஞ்சித் புண்ணியவர்த்தன. நாடு, அதன் நீர் வளங்களை எவ்வாறு கையாள்வது என்பதில் ஒரு பாரிய நடத்தை மாற்றத்துக்கு உள்ளாகுதல் வேண்டுமெனத் தெரிவிக்கிறார் திரு. புண்ணியவர்த்தன. அது, நீரை ஒரு போதும் முடிவுறாத விநியோகம் எனக் கருதிக் கையாள்வதிலிருந்து விலகி ஒரு உயர்ந்த விலையுடனான ஆடம்பரம் மிக்க பொருள் எனக் கருதிக் கையாளும் நிலைக்கு மாற வேண்டும்.

அமந்தா பெரேரா

## அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள்

இன்று இலங்கைச் சமுதாயத்தை மிகவும் அழுத்தும் ஒரு பிரச்சினை அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவாகும். ஒவ்வொரு தடவையும் பொருளொன்றை கொள்வனவு செய்யும் போதும் மற்றும் ஒரு தேர்தல் வாக்குறுதியாக அரசியல்வாதிகளால் உபயோகிக்கப்படும் சமயங்களிலும், தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் ஒவ்வொரு அம்சத்தையும் எந்த மாற்றமுமின்றி அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு பாதிப்பதால், இந்தப் பிரச்சினை சமுதாயத்தில் உட்பொதிந்து போயுள்ளது. இலங்கையில் வாழ்க்கைச் செலவு தொடர்ச்சியாகவே அதிகரிப்பது, பொது மக்களின் பல்வேறுபட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை மோசமான வகையில் பாதிக்கின்றது என்பது தெளிவானதாகும்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் சமூகவியல் மற்றும் மானுடவியல் திணைக்களத் தலைவர், கலாநிதி. பிரணீத் அபயசுந்தர அவர்கள் கூறுவதின்படி, குடும்பத்தின் வாழ்வதற்கான உரிமை அதிகரிக்கும் செலவுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. “உணவு, உடை, மின்சாரம், சமையல் வாயு போன்ற அடிப்படைகளிலிருந்து வீட்டு வாடகை, அவர்களது குழந்தைகளுக்கான பாடசாலைக் கட்டணங்கள் அல்லது பாடசாலை வாகனத்துக்கான கட்டணங்கள் எனப் பல்வேறுபட்ட செலவுகளை இன்று மக்கள் கொண்டுள்ளனர்”, என்று அவர் கூறுகிறார். பால் மாவின் அதிகரிக்கும் செலவு மீது கவனம் செலுத்திய, கலாநிதி. அபயசுந்தர, அந்த தனியொரு பொருளின் அதிகரிக்கும் விலை இன்று ஒரு சராசரிக் குடும்ப அலகில் கஷ்டத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார். அரசாங்கம் வரிகளை இடும் போது நிறுவனங்கள் விலைகளை அதிகரிக்கின்றன, ஆனால் மக்களின் வருமானம் அநேகம் அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் உள்ளது என கலாநிதி. அபயசுந்தர சுட்டிக் காட்டுகிறார்.

“தங்களால் கட்டுப்படியாகததால் பெற்றோர்கள் சிலர், தாங்கள் குறைவாக உட்கொண்டு, பிள்ளைகளுக்கு கூடுதல் உணவைக் கொடுக்கின்றனர்”, எனக் குறிப்பிடும் அவர், அதிகரிக்கின்ற செலவுகளினால் ஏற்படுகின்ற கடனாளியாதல் உட்பட்ட பல்வேறு பிரச்சினைகள் குடும்ப அலகில் துன்பங்களை உருவாக்குகின்றன என மேலும் குறிப்பிட்டார்.

சராசரிக் குடும்பத்துக்கான காலம் மாறிவிட்டது. அவரது சொந்த வாழ்க்கையிலிருந்தான ஒரு உதாரணத்தை எடுத்த, கலாநிதி. அபயசுந்தர, அவரது தந்தையே வேலைக்கு போனதாகவும், ஆனால் தாய் வீட்டிலிருந்து குடும்பத்தைப் பராமரித்தாகவும் நினைவுபடுத்துகிறார். “இன்று போலல்லாது சம்பளத்திற்கு ஒரு தரமும் பெறுமதியும் இருந்ததால் நாங்கள் அவரது அந்தச் சம்பளத்தில் போதுமான வகையில் சமாளித்தோம்:. இன்று அநேகமான குடும்பங்களில் இரண்டு வாழ்க்கைத் துணைகளுமே வேலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர், என்று அவர் மேலும் தெரிவித்தார். அதிகரிக்கும் செலவுகளைத் தாங்குவதற்கும் அதன் பின்னர் ஒரு குடும்பத்தைப் பராமரிப்பதற்கும் இயலாது என்கின்ற அச்சத்தின் காரணமாக சிலர் தங்களது திருமணங்களைக் கூட பிற்போடுகின்றனர்.

“எப்பொழுதும் அழுத்தத்திற்கு உட்பட்டிருக்கும் ஆட்கள் சண்டைகள் மற்றும் விவாதங்களில் ஈடுபடுவது அதிகரித்து அவர்களிடம் மகிழ்ச்சி இல்லாது போகின்றது, அவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக மேலதிக நேரம் வேலை செய்வதினால் குடும்பத்தாருடன் செலவிடுவதற்கு குறைந்த அளவிலான நேரத்தையே கொண்டுள்ளனர். எனவே அதிகரிக்கும் செலவுகள் நபரொருவரின் குடும்ப வாழக்கைக்கான உரிமையையும் மற்றும் ஒரு போதுமான வாழ்க்கைத் தரத்துக்குமான உரிமையையும் மோசமாகப் பாதிக்கின்றது”, என அவர் கூறுகின்றார்.

அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மற்றொரு முக்கிய பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமையே கல்வியாகும். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளரும் மற்றும் நன்கறியப்பட்ட கல்வியாளருமான, ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் கருத்துப்படி, இலங்கையில் பாடசாலைகளில் தக்க வைத்துக் கொள்ளும் வீதம் குறைவானது என்பதைக் குறிப்பிட்டு, ‘பாடசாலைகளில் பிள்ளகைளைத் தொடர்ந்து அனுப்புவதற்கு இயலாததினால், வறிய குடும்பங்கள் மீது அதிகரிக்கும் செலவுகள் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது”, எங்களது கல்வி முறையை நாங்கள் ‘இலவசக் கல்வி’ எனக் குறிப்பிட்டாலும், பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து வைத்திருப்பதை குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு கஷ்டமாக்கும் பல மறைமுகமான செலவுகள் அங்கு உள்ளன, என அவர் சுட்டிக் காட்டுகிறார்.

“காகிதாதிகள், சீருடைகள், சாப்பாடுகள், கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் போன்றவை இலவசமாக வழங்கப்படுவதில்லையாதலால், அவற்றை வாங்குவதற்கு பணம் தேவை”, எனத் தெரிவிக்கும் அவர், அணிவதற்கு சப்பாத்து இல்லாமை போன்ற சிறிய விடயங்கள் கூட ஒரு பிள்ளை பாடசாலையை விட்டு இடைநிற்பதற்கு செய்யலாம் என விளக்கினார். தான் வைத்திருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட பணத்தை

எவ்வாறு பயன்படுத்துவது என தொடர்ந்து கவலையுறும் தாயொருவருக்கு, அதிகரிக்கும் செலவு களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பவது என்பது மிகவும் மனவழுத்தம் தரக்கூடிய ஒரு விடயமாகும். "சில பிள்ளைகள் இந்த ஓட்டைகள் ஊடாக விடுபட்டு இன்றைய நாளிலும் மற்றும் இந்த வயதிலும் கூட வீடுகளில் வேலை செய்கின்றவர்களாக (வீட்டு வேலைக் காரர்களாக) வந்து முடிவடைகின்றனர், என அவர் மேலும் கூறினார். இறுதியாக வாழ்க்கைச் செலவு கல்விக்கான உரிமையை பாதிக்கின்ற அதேவேளை, இந்தப் பிரச்சினை கிராமத்து வறியவர்களை விட நகரத்து வறியவர்கள் மத்தியில் கூடுதலாகக் காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டார்.

போதுமான ஆரோக்கியம் மற்றும் உணவு என்பவற்றுக்கான உரிமை கூட வானை எட்டும் செலவுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை போஷாக்கு சங்கத் தலைவரும், உணவியல் சிகிச்சை வல்லுநருமான, வைத்தியர். ஏஞ்சலா டி சில்வா அவர்களின் கருத்துப்படி, அதிகரிக்கும் செலவுகள் போதுமான உணவுக்கான வழிமுறைகளை மட்டுப் படுத்தலாம். நபரொருவரின் வருமானத்தின் பெரும் பகுதி உணவுக்காக செலவிடப்படுகையில், சில சமயங்களில் மக்கள் தவறான உணவு வகைகளில் செலவிடுகின்றனர் என அவர் குறிப்பிட்டார். "நாங்கள் திராட்சைப் பழம் மற்றும் சீஸ் போன்ற விலை கூடிய பொருட்களை வாங்குகிறோம், ஆனால் அதே போசாக்கைத் தரக்கூடிய விலை குறைவான பொருட்கள் உள்ளனவா என நாம் பார்க்கிறோமா?" வைத்தியர் டி சில்வா அவர்களின் கருத்துப்படி, ஒரே வகையான உணவுகளை உட்கொள்வதனால் மந்த போசாக்கும் அதே போன்று மிகை போசாக்கும் ஏற்பட்டு, பல்வேறு வகையான உடலாரோக்கியப் பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்ல முடியும். மக்களுக்கு இது பற்றிய அறிவு போதுமானதாக இல்லை எனவும் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்திலும் கூட உணவுத் தெரிவுகளை மேற் கொண்டும் மற்றும் பணத்திற்கான பெறுமதியைப் பெறுவதற்கு மக்கள் அறிவூட்டப்பட வேண்டும் என அவர் கூறுகின்றார். கிராம மட்டத்திலான வருமானம் குறைந்தவர்கள் வீட்டுத் தோட்டங்களைக் கொண்டுள்ளதினாலும் மற்றும் ஒரு குறித்த அளவிற்கு தங்களது போசாக்குத் தேவைகளை அவர்கள் பூர்த்தி செய்வதினால், இந்தப் பிரச்சினை கிராமப் பிரதேசங்களை விட நகரப் பகுதிகளில் கூடுதல் முக்கியத்துவமானத உள்ளது என்று, திருமதி. ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் கருத்தோடு இணங்கியதாக வைத்தியர் டி சில்வா அவர்களும் தெரிவிக்கிறார்.

அதிகரிக்கும் செலவுகள் பற்றியதாக பொதுமக்களின் முறைப்பாடுகளிற்கு முரண்பட்ட வகையில், மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் , கொழும்பு விலைச் சுட்டி (வாராந்த அடிப்படையில் 350 பொருட்களையும் மற்றும் அதன் விலைகளையும் காட்டும் பட்டியல்) கடந்த வருடத்திலிருந்து 4.2 சதவீத அதிகரிப்பையே கண்டதாக சுட்டிக்காட்டுகிறார். "அது இன்னமும் நடு இலக்க வீச்சிலேயே உள்ளதினால் அது சகித்துக் கொள்ளப் படக்கூடியதுடன் அது ஒரு பெரிய அதிகரிப்பல்ல" என்பதன் மூலம் தற்போதைய நிலைமை நியாமான வகையில் கடுமையற்றதாக உள்ளது என்றே மத்திய வங்கி கருதுகிறது.

சந்திரலதா என்பவர் ஒரு குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்திலிருந்தானவர். அவரது வீடு இருளில் மூழ்கி இருந்தது, ஏனெனில் அவரால் மின்சாரக் கட்டணைத்தை செலுத்த இயலவில்லை, அதன் பயனாக மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. இன்றைய குடும்பங்கள் பலவற்றைப் போலவே அவரும், அவரது கணவர் ஆகிய இருவருமே வேலை செய்கின்றனர், ஆனாலும் குடுபத்திலான ஒரு புதிய வரவையடுத்து, அவர்கள் இன்னமும் நிதிரீதியான கஷ்டங்களுக்கு முகங் கொடுக்கின்றனர். "விசேடமாக சுகாதாரப் பராமரிப்புகள் மற்றும் மருந்தகங்களிருந்தான மருந்துகள் என எல்லாமே விலை அதிகரித்ததாக உள்ளது, அரசாங்க வைத்தியசாலைகளில் எல்லா மருந்துகளும் கிடைப்பதில்லை, எனவே நாங்கள் வெளியே மருந்துக் கடைகளில் தான் வாங்க வேண்டியுள்ளது", எனக் கூறும் அவர் இது நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு கூட பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது என்றார்.

அதிகரிக்கும் செலவுகள் வாழ்க்கையில் அடிப்படையான அத்தியாவசியங்களைப் பெறுவதற்கு மக்களின் இயலுமை களில் மோசமான பாதிப்புகளை தெளிவான வகையில் கொண்டிருக்க முடியும். பல்வேறு கஷ்டங்களுக்கு முகங் கொடுக்கும் வேளையில் தங்களது அடிப்படைத் தேவை களைக் கூட மக்கள் விட்டுக் கொடுப்பதால், உலகின் மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியலின் கடைசி 20 நாடுகளிலொன்றாக இலங்கை இருப்பதைக் காண்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஓர் போதுமான வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவை மக்கள் தாங்கிக் கொள்வதற்கும் அதிகம் செய்யப்பட வேண்டியுள்ளது, ஆனாலும் இது தொடர்பில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதிற்கு சான்றுகள் எதுவும் இல்லை.

மானேக்ஷா போர்ஹம்


**_Published with support from CCFD_**

*Send your stories, photos and cartoons to*
*lst.escrprogram@gmail.com*
*Signed articles are the view of the writer.*

*Published in Sinhala, Tamil & English and downloadable from*
*http://www.lawandsocietytrust.org/resources.html*